DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.266/2025**

Prosecution **PW.2**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | கார்த்திகேயன் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | மாணிக்கம் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 44 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.03.2026

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம் கே.புதுப்பட்டியில் குடியிருந்து வெல்டிங் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன நாகம்மாள் எனது அத்தை முறையாகும். ஆஜர் எதிரி எனக்குத் தெரியும். 23.02.2022 ம் தேதி நானும் எனது மனைவி சாந்தியும் எனது அத்தை நாகம்மாளை பார்ப்பதற்காக அவரது வீட்டிற்கு வந்திருந்தோம். எனது அத்தை வீடு கரூர்–திருச்சி பைபாஸ் ரோட்டில் உள்ளது. இரவு 12.30 மணியளவில் எனது அத்தை பாத்ரூம் செல்வதற்காக கரூர் திருச்சி ரோட்டில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சிறுநீர் கழிப்பதற்காக ரோட்டை கடந்த போது அரசு பேருந்து TN 45 3720 என்ற எண்ணுள்ள பேருந்து கிழக்கு நோக்கி வந்து எனது அத்தையின் மீது மோதிவிட்டது.

2. எனது அத்தைக்கு வலது பக்க தலையில் காயம் ஏற்பட்டது. குளித்தலை அரசு மருத்துமனைக்கு அழைத்துச்சென்றார்கள். பின்பு நான் வீட்டிற்கு சென்று விட்டேன். எனது அத்தை சம்பவ இடத்தில் இறந்துவிட்டதாக சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள். விபத்துக்கு யார் காரணம் என்ன காரணம் என்றால் ஆஜர் எதிரி தான் காரணம் அஜாக்கிரதையாக வண்டியை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தியது தான் காரணம்.

**<u>எதிரி தரப்பில்  குறுக்கு விசாரணை:</u>**

நான் எந்த ஊரியில் குடியிருக்கிறேன் என்றால கே.புதுப்பட்டியில் குடியிருந்து வருகிறேன்.  இறந்து போன நாகம்மாள் எனக்கு என்ன உறவு என்றால் அத்தை முறையாகும்.   இறந்து போன நாகம்மாள் 80லிருந்து 85 வயதிருக்கும். மகாதானபுரம் எனக்கு நன்கு அறிமுகமான பகுதியாகும்.  பொன்னரசி டவர் ரோட்டின் வடபுறம் உள்ளது.   பொன்னரசி டவர் பகுதியில் தான சிறுநீர் கழிக்கச்செல்லும் போது விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான்.  மேற்சொன்ன சங்கதியைத்தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான்.

2. நான் சம்பவ சமயத்தில்   மகாதானபுரம் வரவில்லை என்றால் சரியல்ல. இறந்து போன நாகம்மாள் விபத்தில் இறந்ததாக கேள்விப்பட்டு சம்பவயிடத்திற்கு வந்தேன் என்றால் சரியல்ல.  இறந்து போன நபர் அத்தை என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.12 10:51:19 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.